20 NOV 1973
MADRAS

இந்திய விடுதலை வெள்ளி விழா

SILVER JUBILEE OF INDIAN INDEPENDENCE

1438

சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்

PROCEEDINGS OF THE SPECIAL MEETING

திங்கட்கிழமை, 1972 ஆகஸ்டு 14

MONDAY, 14TH AUGUST 1972

©
தமிழ் நாடு அரசு
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்

PROCEEDINGS OF THE SPECIAL MEETING

இந்திய விடுதலை வெள்ளி விழா.

சிறப்புக் கூட்ட நிகழ்ச்சி.

திங்கட்கிழமை, 1972 ஆகஸ்டு 14.

1972–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ஆம் நாள், திங்கட்கிழமை இரவு 10-30 மணிக்கு மணங்கமழும் மலர் மாலைகளாலும், வண்ணத் தோரணங்களாலும் ஒளி விளக்குகளாலும் சிறப்புற அலங்கரிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை மண்டபத்தில், 25-ஆவது சுதந்திர தின வெள்ளி விழாவினையொட்டி நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்களும், சட்டப் பேரவை-சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்புப் பெற்றவர்களும் தனி இருக்கைகளில் அமர்ந்திருந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் ஆகியோருடன் மேதகு ஆளுநர் அவர்கள் இரவு 10-45 மணிக்கு சட்டப் பேரவை மண்டபத்தை வந்தடைந்தார்கள்.

அனைவரும் அமைதியாக எழுந்து நிற்க ''நீராரும் கடலுடுத்த'' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் இசைக்கப்பெற்றது.

பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் தம் உரையை நிகழ்த்தினார்கள்.

HIS EXCELLENCY THE GOVERNOR (THIRU K. K. SHAH): Hon. Mr. Chairman, Hon. Mr. Speaker, Hon. Leader of the Council, Hon. Leader of the Assembly, Hon. Leaders of Political Parties and Hon'ble Members,

With unbounded joy and pride of an Indian, I rise, on this memorable day of our history, to address this august session of the Tamil Nadu Legislature. I feel honoured and privileged to have this rare opportunity of addressing this unique joint function.

The Fifteenth of August is India's Date with Destiny. This date symbolises the aims and aspirations of the people of India. Exactly 25 years ago, we shattered the shackles of foreign rule and

won our independence after a prolonged but non-violent struggle, under the dynamic leadership of Mahatma Gandhi who made us forget the differences of caste, community, religion and language and made us breathe the powerful fresh air of a strident nation, full of vigour and dedicated to ideals of democratic socialism. His concept of Non-co-operation and Non-violence is hailed as a marvellous political philosophy capable of making moral standards compatible with political compulsions. Every phase of our movement for independence and its successful culmination bear testimony to the relevance, resilience and practicability of his creed.

On this historic day when I, as a humble soldier and active participant of that mighty movement, look back with legitimate pride on the long and arduous journey of our struggle for independence, scenes of unprecedented unity, unimaginable courage and unparalleled sacrifices pass before my mind's eye in rapid succession and thrill me even today. Great leaders from all over India, under the charismatic and inspiring leadership of Mahatma Gandhi, moved from one end to the other and created a mass upsurge of unaccountable dimensions. It was a treat to watch docile Indians braving the wrath of the mightiest and standing their ground with determination. Tamil Nadu not only played a dominant role but provided inspiration and leadership. The pages of the history of our struggle for independence are adorned with unmatched heroism, able leadership and immense sacrifices from several parts of Tamil Nadu.

On this solemn day, the whole of Tamil Nadu, like the rest of India, is throbbing with enthusiasm and joy to celebrate this historic day. We recall today, with gratitude, the sacrifices and dedication of all the valiant freedom-fighters of India. Let us pay our homage to all men and women, the high and the humble alike, who stood valiantly against heavy odds, were unmindful of sufferings, and laid down their lives at the altar of the Motherland. Posterity will acclaim with pride and pass on from generation to generation the saga of their heroism, their trials and tribulations.

The Government of Tamil Nadu are second to none in recognising the supreme sacrifices made by those great sons and daughters of the soil. Eightyone freedom-fighters have been selected for the award of Tamra Patras by the Centre. In the course of the

year, more freedom–fighters will be honoured. May I join you all in offering our tribute of admiration and gratitude to them and their families and assure them that the grateful people of Tamil Nadu will ever remember their services with gratitude?

Twentyfive years of post-independence era have given us a new generation brought up in the hallowed atmosphere of freedom and democratic socialism. To build the India of our dreams, phased programmes of economic development under the Five-Year Plans were undertaken. Our efforts to bring about rapid progress in the spheres of agriculture and industry, transport and power, irrigation and education, have, by and large, succeeded. Our efforts to usher in democratic socialism have met with increasing acclaim. We are waging a war against poverty, disease and squalor. It is no exaggeration to say that in the context of the vastness of our area and the huge population, and centuries of backwardness under foreign rule, we can justifiably say that our progress is far better than any other newly liberated nation. There is no denying the fact that much more remains to be done to lift the masses from stagnation and to assure them decent standards of living.

Tamil Nadu ranks third in industrial development and is making a notable contribution to the Green Revolution. The production of rice per acre in Tamil Nadu is the highest in India. In generation and distribution of power as well as rural electrification, we have an excellent record.

We have chosen the path of self-reliance. There is all-round enthusiasm in Tamil Nadu for rapid development. Vigorous ameliorative measures, like slum-clearance, rural water-supply and beggar rehabilitation, seek to serve the common man who is the pivotal point of our programmes. We direct our energies and power to bring about appreciable change in the living conditions of the poor. This State is contributing its substantial share to the development of the country as a whole, and our endeavours in nation-building work are recognised in all quarters. As responsible representatives of the people, you are active partners in this undertaking.

It is in the legislature that the life of democracy throbs and its deliberations shape policies and programmes for the welfare of the people. Tamil Nadu can legitimately feel the glow of immense

satisfaction at parliamentary system of Government taking deep roots. The members of the legislature, all these twentyfive years, have vied with one another in maintaining dignity and decorum and honouring high standards of parliamentary conventions and traditions. All the general elections, during these 25 years were peaceful and have revealed increasing maturity of voters. As far as possible, slogans are avoided and every effort is made to educate the voters by making it convenient for them to listen to all points of view without fear or favour.

May I, on this occasion, plead with Hon'ble Members to promote greater democratic thinking, evolve a higher democratic way of life for the people and strengthen the roots of our nascent democracy, shorn of its weaknesses, bearing in mind what the Father of the Nation said in these immortal words—

" Democracy must, in essence, mean the art and science of mobilising the entire physical, economic and spiritual resources of all the various sections of the people in the service of the common good of all.

The very essence of democracy is that every person represents all the varied interests which compose the nation. "

Let us take a vow, sacred and solemn, that no sacrifice will be spared to preserve the unity of India. Let us inject into our blood the Mantra of emotional integration and create an insatiable thirst for living as Indians. Let us all sing the glory of India and build Bharat of our dreams where poverty will be rooted out and prosperity will reign for ever. Vanakkam (Cheers).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களே, அனைத்துக் கட்சியின் தலைவர்களே, அன்புக்குரிய உறுப்பினர்களே,

இந்திய சுதந்திரத்திற்கு இன்று வயது இருபத்தைந்து. முறுக்கான பருவம். வெற்றித் திருமகளை மணந்து வெள்ளிச் சிரிப்புக் காட்டுகின்ற காளைப் பருவம். இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர்—விழிகளை இழந்தோர்—உயிரினைத் தந்தோர்—உடைமைகள் பறி கொடுத்தோர்—சிறை வாழ்ந்தோர்—செக்கிழுத்தோர்—கஞ்சிக்

கலயம் ஏந்தியோர்—கல்லறையாக மாறினோர்—துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர்—தூக்குக் கயிறை முத்தமிட்டோர்—அனைவரது காலடிகளிலும் அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகின்றோம். அவர்களில் சிலர் சிலையாகி விட்டனர். சிலர் படமாகி விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலையாகி விட்டனர்.

நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் காந்தியண்ணல்—அவர் வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த தமிழ்நாட்டுத் தானைத் தலைவர் பெருமக்கள்—அணியணியாய்த் திரண்டெழுந்து அந்நிய ஆட்சிதனை தங்கள் வீர மூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர் குடிப் பெருமக்கள் !

அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம்—பெய்திட்ட குருதி மழை—பொழிந்த கண்ணீர்—

சுதந்திரப் பயிருக்கு உரமாகும் ! பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும்—நெல்மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும்—நேரம் பார்த்து நீர் பாய்ச்சுதற்கும்—நோய்நொடிகள், பூச்சி புழு அணுகாமல் விரட்டுதற்கும் இந்த இருபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம். இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா ! எதிரிகளின் ஆக்கிரமிப்போ இரண்டு மூன்று தடவைகள் !

இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம்—இணையற்ற வெற்றிச் செய்திதனை இமயத்தின் நெற்றியிலே பொறித்துக் காட்டி இங்குள்ளோர் மட்டுமல்ல ; எங்குள்ளோர் ஆயினும் எமது ஒற்றுமை காணீர் என்று பறை அறைவித்தோம்.

வெள்ளம் போல் எங்கள் கூட்டம்
உள்ளத்தால் ஒருவரே—மற்று
உடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணாதே—என
வையம் கலங்கக் கண்டு—
உள்ளம் துள்ளும் நாள்

இந்த நாள் என்று மகிழ்கின்றோம். ஆரத் தழுவி அகமலர் கண்டு—முகமலர் ஒத்தி ஆனந்தப் பள்ளுப் பாடுகின்றோம்.

இருட்குகையில் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்கு !

அதனைப் புயலிலும், பெருமழையிலும் அணையாது காக்கின்ற ஐம்பது கோடி மக்களின் கரங்கள் !

அந்தக் கரங்கள், மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்!

சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள் !

ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள் !

ஆலையில் சக்கரம் சுழற்றிடும் கரங்கள் !

நாற்று நடுகின்ற கரங்கள் !

நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள் !

பால் கிண்ணம் ஏந்தும் கரம்—பழ ரசக்

கோப்பை எடுக்கும் கரம்—பாதாம்

பிஸ்தா—பச்சை முந்திரி—பொறுக்கும்

கரம்—மிகமிகக் குறைவு !

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே !

அவற்றில் சில கரங்களாகவும் பல மரங்களாகவும் இருப்பானேன் ? ஏற்றத்தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்திரம் பெற்றோம் அன்று ? இல்லை—இல்லை—இல்லவே இல்லை! முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன் ? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன் ?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம் !

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை—

கல்லார் இல்லை —

நல்லார் மீது பாய்கின்ற வல்லார் இல்லை—

எங்கும் புதுமை ! எதிலும் புதுமை ! அனைத்தும் பொது உடைமை !

அந்நிலை நோக்கிப் படிப்படியாய் உறுதியாக நடைபோடும் நம் அரசு என்பதை நாடறியும்—

எத்தனையோ சமதர்மத் திட்டங்கள் கொணர்ந்திங்கு செயல்படுத்தியுள்ளோம் ! இன்று விழா எடுத்துக் கலந்து

விட்டால், விழா நோக்கம் நிறைவாவதில்லை—அதனாலே சில மகிழ்ச்சிச் செய்திகள் சொல்லுகின்றேன்.

பேருந்துத் தொழில் முழுதும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் பொதுத் துறையாய் ஆக்குதற்கு இன்று முதல் முயற்சி எடுக்கப்படும்—விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்; ஏற்கெனவே அறிவித்தவாறு பொதுத் துறையில் தொழிலாளர்கட்கு முதலீட்டில் இருபத்து நான்கு சதவிகிதம் பங்கு ஒதுக்கப் பெறுமென்ற முடிவினையும் இந்நாளில் தெரிவிக்கின்றேன். [கரவொலி.]

தமிழ்நாட்டில் விடுதலைப்போர் வீரர்கட்கு மூன்று திங்கள் சிறை சென்றோர் பட்டியல்படி இப்போது 7,300 பேருக்கு மாதந்தோறும் ரூபாய் ஐம்பது மானியமாய் வழங்குகின்றோம். அவர்தம் கோரிக்கை நிறைவேற்ற–சுதந்திரமடைந்த இருபத்தைந்தாம் ஆண்டு நினைவாக—இனிமேல் இருபத்தைந்து ரூபாய் உயர்த்தி எழுபத்து ஐந்தாக வழங்கப்படுமென அறிவிக்கின்றேன். [கரவொலி.]

இந்த விழா நாளையொட்டி—சிறைவாழ் கைதிகட்கு தண்டனைச் சலுகைகளைத் தெரிவிக்கின்றேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோர்க்கு $1\frac{1}{2}$ ஆண்டுக்காலத் தண்டனைக் குறைப்பு; ஐந்தாண்டுக்கு மேல் பத்தாண்டுக்குள் தண்டனை பெற்றோர்க்கு ஒன்பது மாதம் தண்டனைக் குறைப்பு ;

ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை நாலரை மாதம் தண்டனைக் குறைப்பு ;

மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத் தண்டனை அனுபவித்திருப்பின் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். அதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காதிருந்தால் மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர்.

நாளைக் காலையிலே சுமார் இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட கைதிகள் விடுதலையாவர் என்ற செய்தியினையும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தி. தமிழக மக்களைப் பூரிப்பில் ஆழ்த்துகின்ற புதுச் செய்தி. சிலை வைத்துள்ளோம் சிதம்பரனாருக்குச் சென்னைக் கடற்கரையில்! செப்டம்பர் திங்கள் அந்தச் செந்தமிழன் சிலைதனையே திறக்க வருகின்றார்-நம் அன்புக்குரிய பிரதமர், தூத்துக்குடிக்கு! சிலையான தமிழர் சிதம்பரனார் இழுத்திட்ட செக்கொன்று கோவைச் சிறையினிலே கேட்பாரற்றுக் கிடக்கின்ற சேதிதனை அறிவீரோ என்னவோ நானறியேன்! அந்தச் சிங்க மறவன் இழுத்த செக்கினை இங்கு சென்னைக்குக் கொணர்ந்து சிறப்பான இடமொன்றில் காட்சிப் பொருளாய் ஆக்குதற்குத் திட்டம் தீட்டி விட்டோம். இத் திங்கள் முடிவதற்குள் இனிது நிறைவேறும் அந்தக் காரியம் என்று கூறுகின்றேன்.

தியாகத்தின் சின்னமன்றோ அந்தச் செக்கு !
தியாகத்தை மதிப்பதன்றோ நம் அரசு !
தில்லையாடி வள்ளியம்மைக்குத் திருநகர் அமைத்த
தன்றோ தமிழ் அரசு !

அதனாலே தியாகத்தைப் போற்றிடுவோம் !
தியாகிகளைத் தெய்வமெனத் தொழுதிடுவோம் !
மண் காக்க—மான மொழி காக்க—
கண் காக்கும் இமை போல் வாழ்ந்து
வீழ்ந்துபட்ட வீரர் குல நாயகர்க்கு
இந்நாளில் அனைவருமே வணக்கம் செய்வோம்.

[கரவொலி.]

திரு. எஸ். எஸ். இராமசாமி படையாட்சி : மேன்மை தங்கிய கவர்னர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, சக அமைச்சர்களே, சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கம்.

நம்முடைய நாடு அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 25 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. இந்த 25 ஆண்டுகளில் நடந்த நிலைமைகளை எல்லாம் நாம் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். இனி நாம் இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும், ஐக்கியத்திற்கும் ஊறு நேரா வண்ணம் பேணிக் காப்போம் என்ற உறுதியினை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு பெரிய நாட்டின் முன்னேற்றப் பாதையில் 25 ஆண்டு காலத்தினை சரித்திரத்தில் நீண்ட காலமாக

எண்ண முடியாது. நாட்டின் பல பிரச்சினைகளையும் நல்ல முறையில் அணுகித் தீர்த்து வைப்பதில் மன்ற உறுப்பினர்களுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அந்த வகையில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவோம் என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

THIRU A. R. DAMODARAN : Your Excellency, Hon. Chief Minister, Hon. Speaker, Hon. Chairman and fellow Members of the Legislature, I deem it a great privilege, Sir, to be here on this happy occasion to herald the 25th anniversary of our country's freedom. In the long recorded history of mankind, few events have had such epoch-making significance as the peaceful transfer of power of a mighty colonial nation to a nation of 400 million subject people. In fact the bells which tolled the freedom of India tolled a different kind of death-knell for colonial empires all over the world and during the past 25 years we have witnessed the amazing spectacle of seeing subject nations in Africa, Asia and all over the world achieving the much-sought-goal of freedom and independence.

In fact, Sir, when we review our 25 years of existence we should feel proud of the fact that in every historic struggle that has taken place in the world, we have stood in the forefront to champion the cause of all subject regimes against colonial mastery. It must, however, be a matter of some regret to us that although we have carried on this long struggle on behalf of the subject people of other Nations, we should find ourselves in the position of being comparatively friendless and the very nations whose independence and whose freedom we espoused should today turn a rather bitter eye towards Indian nationals abroad.

On this happy and memorable occasion, Sir, I would like to state that it is our duty as a Nation, all over the country, to stand by our nationals abroad so that they may be treated with the dignity and self-respect that Indians deserve abroad. There is no point in our saying that we are a big Nation, a Nation of 500 millions, the second biggest democracy in the world, nay the first democracy in the world because I do not count China as a democracy—there is no point in saying all these if we are not going to protect the dignity of our nationals abroad.

We must also remember on this occasion, Sir, the great patriots, the noble men who have made such great sacrifices and laid down their lives for the cause of Indian independence, Mahatma Gandhi, Jawaharlal Nehru and Sardar Vallabhai Patel, to mention only a few of the names, Sir, the great names that have been responsible for the making of New India, the modern India. I think on this occasion we should pay our public homage and tribute to those great personalities. A few days before Pandit Jawaharlal Nehru expired, there was a note on his pad wherein he quoted a poem of Robert Frost in which he said that the "woods were long and deep and that he had many many miles to go". May we remind ourselves today that the woods are long and deep and we as a Nation have many many miles to go before we are able to accomplish what we sought to achieve when we took the pledge to protect our Nation and our people 25 years ago. Thank you.

திருமதி த. ந. அனந்தநாயகி : மேன்மைதங்கிய கவர்னர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, சட்டசபை சபாநாயகர் அவர்களே, மேலவைத் தலைவர் அவர்களே, மற்றுமுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களே, அமர்ந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே,

பாரதத்தினுடைய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய இந் நன்னாளில், இந் நள்ளிரவில் இந்த அவையில் கூடியிருக்கிறோம். இன்று வெள்ளி விழா கொண்டாடும் நிலையில் பாரதத்தின் சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்த உத்தமத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரண மக்களாக இருந்த நம்மையெல்லாம் தட்டியெழுப்பி உரிமை முழக்கம் செய்து ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தலுக்கும், துன்புறுத்தலுக்கும் பணியாது விடுதலை வாங்கித் தந்த உத்தமர் காந்தியடிகளும், அவர் வழி சென்ற தியாகிகளும் தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தத்தம் செய்தார்களே, அவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் நம் மத்தியில் தியாகிகள் வாழ்ந்து வருகிறார்களே அவர்களுக்கும் மரியாதை காட்டத் தயங்கவில்லை என்ற வகையில் முதலமைச்சர் அவர்களும் சில சலுகைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே தியாகிகளுக்கு வருங்காலச் சந்ததியினர் மரியாதை கொடுக்கத் தயாராக இருக்கவேண்டுமென்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பாரதத்திற்கு, இந்த 25 ஆண்டுகளில் எத்தனையோ சோதனைகள் வந்தும்கூட அத்தனையையும் தாங்கிக் கொண்டு உலகத்திலேயே மகத்தான மக்களாட்சி நடைபெறும் நாடு என்ற நல்ல பெயரை எடுத்து இங்கே ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டு விட்டது என்று உலகம் மெச்சக் கூடிய அளவுக்குப் பல தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். சாதாரண அரசியல் சுதந்திரம் இருந்தால் மட்டும் போதாது, பொருளாதார சுதந்திரமும் பெறவேண்டுமென்ற அடிப்படையில்—வள்ளுவன் கூறியதுபோல்—

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு ''.

என்ற வகையில், பசி இல்லாத பாரதத்தை, பகை இல்லாத பாரதத்தை, பிணி இல்லாத பாரதத்தை உருவாக்க நாம் எல்லோரும் உறுதி பேற்கொள்ள வேண்டிய இந்த நன்னாளில் தன்னம்பிக்கையோடு, தைரியமாக, ஒன்றுபட்ட இந்தியாவை, உறுதியான இந்தியாவை, வலிமையான இந்தியாவை, சிறந்த இந்தியாவை உருவாக்க நாம் என்னென்ன சேவைகளைச் செய்ய முடியுமோ அனைத்தையும் செய்து உருவாக்கத் தயாராக இருக்க வேண்டுமென்றும், அதற்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சா. கணேசன் : கவர்னர் அவர்களே, தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே,

வந்தே மாதரம் !

இந்திய விடுதலையின் 25-வது ஆண்டு நிறைவுறுகின்ற இந்தப் புனிதப் பெருநாளிலே, உலக வரலாற்றில் ஒப்பற்ற நிலையில் இந்தத் தேசத்திற்கு சுதந்திரம் பெற்ற நிலையை எண்ணி நாம் மகிழ உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம். இந்தப் பெருமையை நமக்களித்த இறைவன் திருவருளை வணங்கி, இப்பெரு வெற்றிக்குப் பெரும்பாடுபட்டுப் பெருந்தியாகங்கள் புரிந்த—ரகுநாத ராவ், ஜி. சுப்பிரமணிய ஐயர், ஏ. ஓ. ஹியூம், அன்னி பெஸன்ட் அம்மையார், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, அனந்தாசார்லு, மோதிலால் கோஷ், லாலா லஜபதிராய், திலகர் பெருமான், கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தியடிகள்—அன்னை கஸ்தூரிபா, மௌலானா ஷவுக்கத் அலி, முகம்மத் அலி, ஹக்கீம் அஜ்மல்கான், மகாகவி

பாரதியார், ரவீந்திரநாத் தாகூர், சரோஜினி தேவி, தில்லையாடி வள்ளியம்மை, பங்கிம் சந்திர சாட்டர்ஜி, வல்லபாய் பட்டேல், ஜவஹர்லால் நேரு, ராஜன்பாபு, யதீந்திர தாஸ், மகாதேவ தேசாய், காகாஜி கலேல்கார், ஜே. சி. குமரப்பா, திருப்பூர் குமரன், சுப்பிரமணிய சிவா, வ. உ. சி., வாஞ்சி ஐயர், வ.வே.சு. ஐயர், வி. டி. சவர்க்கர், திரு. வி. க., வரதராஜுலு நாயுடு, முகுந்தலால் சர்க்கார், அரவிந்தர், சி. ஆர். தாஸ், சென் குப்தா, நேதாஜி, சேலம் விஜயராகவாசாரியார், எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார், டி. பிரகாசம், பகத்சிங், சுகதேவ், ராஜ்குரு, சி. எப். ஆன்ட்ருஸ், பி. ஜி. ஹரிமன், நாகேஸ்வரராவ் பந்துலு, சுரேந்திரநாத் ஆர்யா, வி. சக்கரைச் செட்டியார், பகதூர்ஷா, ஜான்சி ராணி லட்சுமிபாய், தாந்திய தோபே, குரு கோவிந்தசிம்மன், மங்கம்மாள், விஜயாலயத் தேவர், பூலித் தேவன், கட்டபொம்மன், மருதுபாண்டியர்கள், வேலுத்தம்பி போன்ற அமரர்களான எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களேயும், வீராங்கனேகளேயும் மனங்குளிர நினேந்து, வாய் மணக்க வாழ்த்தி, வணங்குகிறேன்.

இப்பெரும் வேள்வியில் பங்கேற்று அளப்பரும் தியாகங்கள் புரிந்து நம்மிடையே வாழும், ராஜாஜி, ராமசாமிப் பெரியார், ஜெயப்பிரகாஷ் நாராயண், வி. வி. கிரி, கே. சந்தானம், கிருபளானி, காமராஜ், விேனுபா பாவே, கிஜோரிலால் மஷ்ருவாலா முதலான பற்பல அறவோர்களேக் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

அந்நிய ஆட்சி அகன்ற மகிழ்ச்சியிலே வெள்ளி விழா எடுக்கும் இந்நாளில் அந்நிய ஆட்சி அகன்றதால் பெறவேண்டிய பேறுகளே எல்லாம் பெற்றுவிட்டோமா என்று சிறிது சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்தச் சிந்தனேயில் ஊறி, ஒழுக்கம் உயர, உழைப்பும் ஊக்கமும் ஓங்க, பசியும் பிணியும் நீங்கி, வசதியும் வளனும் பெருக ஆண்டவன் அருளே நம்பி இதயபூர்வமாக முயல்வோம் என்று உறுதி பூணுவோமாக என்று கூறி அமைகிறேன். ஜெய்ஹிந்த்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பல நூறு வருஷங்களாக அடிமை உணர்வோடு இருந்த நம்முடைய தாயகத்திற்கு நெஞ்சழுத்தத்தையும், சுதந்திர உணர்ச்சியையும் உண்டாக்கி, அதைப் பெறுவதற்குக் காரணமாக இருந்து, அதைப் பெற்றதற்குப் பிறகு 25 வருஷம் தோழமை உணர்ச்சியோடும் சகோதர உணர்வோடும், ஜனநாயக

உணர்வோடும் நடத்துவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு முதன் முதலாக என்னுடைய தலை சாய்த்து வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திற்காக, தங்களின் ஒப்பற்ற ரத்தத்தைச் சிந்தித் தியாகங்கள் பல செய்து சிறப்புக்குரிய பணிகளை ஆற்றி, இந்த நாடு விடுதலை பெறுவதற்காக ஒவ்வொரு துளி ரத்தத்தையும் சிந்தி, தங்களுடைய விலை மதிக்க முடியாத உயிரை இந்த நாட்டிற்காக அர்ப்பணித்த அந்த வீரத் தியாகிகளுக்கு நான் மரியாதை செலுத்துகின்றேன். தேசத்தினுடைய சுதந்திர உணர்ச்சியை மக்களிடையே தட்டி எழுப்புவதற்காக அல்லும் பகலும், அரும்பாடுபட்ட மகாத்மாஜி போன்ற விலை மதிக்க முடியாத மாணிக்கங்களுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளைக் கடந்தும் 50 கோடி மக்களைக் கொண்ட இந்த உப கண்டம் ஒரு ஜனநாயக ரீதியின் அடிப்படையில் நிலைத்து நிற்கத் தகுந்த ஒரு மனோபலமும் ஒப்பற்ற அந்த உணர்வும் நமக்குக் கிடைத்திருக்கிறது என்ற பெருமை மெய்யாகவே பூரிக்கத் தக்கதாகும்.

பல மொழி, பல இனம், பல எண்ணங்களைக் கொண்டிருந்த நாம் 25 ஆண்டுகள் ஜனநாயக ரீதியில் ஒன்றுபட்டு, கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறோம் என்பதை நினைவுகூர்வதில் நான் பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். 25 ஆண்டுகள் கடந்து இப்பொழுது—நமது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல—யௌவனப் பருவத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் ஜாதி, மத, மொழி பேதமில்லாமல் இந்த ஒப்பற்ற நாட்டைக் காப்பாற்ற எல்லாத் தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியினை எடுத்துக் கொள்வோம் என்று கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். பெருமாள் :</u> மேதகு ஆளுநர் அவர்களே, சட்ட மன்ற மேலவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, பெரியோர்களே, நண்பர்களே,

‘‘ ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே :
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே’’

என்ற ஆனந்த கீதத்தை வீதியெல்லாம் முழங்கி விடுதலைத் திருநாளில் வெள்ளி விழாக் கொண்டாடுகின்ற இன்றைய தினம் இந்த விடுதலையை ஈட்டித் தந்த வீரர்கள் ஒவ்வொரு வருக்கும் நன்றி செலுத்துகின்றேன். சுதந்திரம் பெற்றோம் என்றாலும் விடுதலை தேடித்தந்த லோகமானிய திலகர், பாஞ்சாலம் தந்த வெள்ளைத்துரை, ஆயுதம் தாங்கியவர் களை ஆயுதம் கொண்டே தாக்க வேண்டுமென்று கூறிய போஸ், தேசத்திற்காகத் தியாகம் செய்த பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், திருப்பூர் குமரன், விலா எலும்பு ஒடிய செக்கிழுத்த சிதம்பரனார் ஆகியோருக்கு நன்றி செலுத் துவோம். பாரதியார் பாடியது போல்

"பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை,
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை"

என்று சமுதாயத்தின் அடித்தளத்திலே ஏழை எளிய மக்க ளுக்குக் கிடைக்கின்ற வகையில் ஒரு பொருளாதார விடு தலைப் போராட்டத்திற்கு நாம் போராடுவோம். தொடர்ந்து போராடுவோம்.

வரலாற்றிலே பீகார் மாநிலத்திலேயும், பம்பாய் மாநி லத்தில் சட்டாரா மாவட்டத்திலேயும் ஆகஸ்டுப் போராட் டம் எவ்வளவு வலிமையாக, தீவிரமாக நடைபெற்றதோ, அதுபோலவே தமிழகத்தில் திருவாடானை, தேவக்கோட்டை, பூலாங்குறிச்சி, குலசேகரப்பட்டிணம் போன்ற இடங்களில் போட்டி சர்க்காரை அமைத்து மூன்று மாதங்கள் நடந்தது என்பது விடுதலை இயக்க வரலாறு. முதல் விடுதலைப்போரைத் துவக்கி வைத்த நெற்கட்டுஞ்செவல் பூலித்தேவன் முதல், பூலாங்குறிச்சி சுப்பையா தேவன் வரையிலும் தமிழகத்திலே விடுதலைப் போர் தொடர்ந்து நடந்தது. சுப்பையா தேவ ரைப் பிடிப்பதற்காக விமானத்திலே இருந்து குண்டு வீசி னார்கள். இவையெல்லாம் தமிழகத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு. அந்த வீரத் தியாகங்களைச் செய்த தியாக உள்ளத்தினர் எந்த நோக்கத்திற்காக இவ்வளவு துயரங்களை ஏற்றுக் கொண்டார்களோ அந்த நோக்கம் ஈடேறுகின்ற முறையில் தமிழகத்தின், இந்தியாவின் பொருளாதார விடுதலைக்காக, ஏழை எளிய மக்களுக்காக அயராது தொடர்ந்து பாடுபடுவோம் என்ற சபதத்தை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லிக் கொண்டு அமர் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அவைத் தலைவர் அவர்களே, இரண்டு நூற்றாண்டாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தார் சுரண்டிக் கொழுத்ததற்குப் பிறகு அரசியல் சுதந்திரம் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி கிடைத்தது. விடுதலைப் போரில் வீழ்ந்த மலர்கள், தியாகம் செய்தோர், சிறை சென்றோர், உயிர் இழந்தோர், பட்டியல் பெரிது. இன்று காலை கவியரங்கில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிலருடைய பெயர்கள் வந்தன. இங்கு கூட திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். They are only illustrative and not exhaustive. மறைந்த தலைவர்கள் பட்டியலில் ஏ. வைத்யனுதய்யர், குமாரசாமி ராஜா, முத்துராமலிங்கத் தேவர், டாக்டர் ராஜன், முத்துரங்க முதலியார், டாக்டர் நாயுடு, சத்யமூர்த்தி, சீனிவாசய்யங்கார், மணி ஐயர், போன்றவர்களைக் குறிப்பிடலாம். தேசீய இயக்கத்தோடு தொழிலாளர் இயக்கத்தை இணைத்த சிங்கார வேலர், சக்கரைச் செட்டியார், திரு. வி. க. இவர்கள் நாமம் வாழ்க. ஜீவாவும், சீனிவாசராவும் சிறந்த செல்வங்கள். அவர்களது இதயக் கனவுகள் ஈடேறும். பரமசிவம் அவர்கள் சிறையில் உயிர் நீத்தார்.

1907-லேயே பாரதியார்

'' எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு '' என்றும்
'' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் '' என்றும்
'' பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் '' என்றும்

பாடினர். அவர் கேட்டது ஆனந்த சுதந்திரம்தானே யொழிய ஆகஸ்டு சுதந்திரம் அல்ல, என்று அடிக்கடி ஜீவா அவர்கள் சொல்வார்கள்.

''ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே '' என்றுதான் சொன்ஞரே தவிர, '' பாட்டுக் கச்சேரி நடத்துவோமே '' என்று சொல்லவில்லை. பொருளாதார சுதந்திரம் பெறுவதற்கு எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டுமென்று பாரதப் பிரதமர் அவர்கள் அறைகூவல் விட்டிருக்கிருர்கள். ''இல்லை'' என்பது இல்லை என்று ஆக வேண்டும்.

இரண்டாவது யுத்தம் முடிந்தவுடனே நான்கு சுதந்திரம் பெற வேண்டுமென்று அப்போது சொன்னார்கள். ஏழ்மையிலிருந்து சுதந்திரம், வறுமையிலிருந்து சுதந்திரம், அறியா

மையிலிருந்து சுதந்திரம், பயத்திலிருந்தும் சுதந்திரம் பெறவேண்டுமென்று சொன்னார்கள். நாம் பொருளாதார சுதந்திரம் கிடைப்பதற்குத் தொடர்ந்து தியாகம் செய்ய வேண்டும். இளைய பாரதம் எழுந்து விட்டது !

பாரதிதாசன் அவர்கள் சொன்னார்கள்,

"அக்கா, அக்கா என்று நீ அழைத்தால்,
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம்" என்று.

இதற்காக "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் சொன்னார். தொடர்ந்து தியாகங்கள் செய்வோம். இளைய பாரதம் எழுந்துவிட்டது ! எதற்காக அன்றையதினம் இவர்களெல்லாம் உயிர் விட்டார்களோ, அவர்களுடைய பேரிலே சபதம் எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்களே,

நாம் சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன என்ற மகிழ்ச்சியுடன் இன்று நாம் கூடி வெள்ளி விழாக் கொண்டாடுகிறோம். இந்த 25 ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணல் காந்தி அடிகளின் தலைமையில் பல போராட்டங்களை நடத்தி கடைசியாக, இறுதிப் போராட்டம் ஒன்றை 1942 ஆகஸ்டு 9-ந் தேதி இந்த நாட்டில் ஆரம்பித்தோம். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வெற்றி உறுதியுடன், நாடு சுதந்திரம் அடையும் என்ற நம்பிக்கையுடன் ஈடுபட்டாலும், தாங்கள் திரும்பி வீடு வந்து சேருவோம் என்ற எண்ணத்துடன் யாருமே அந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

அதிலிருந்து $3\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பின்னால் விடுதலைக்காக பேச்சு வார்த்தைகள் நடந்து கடைசியில் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி 25 ஆண்டுகளுக்கு முன்னால் இதே நேரத்தில் நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் அடைந்த போது மகிழ்ச்சியுடன் அந்தச் சுதந்திரக் குழந்தை உதய

மாகவில்லை. சுதந்திரம் பிறந்தபோதே மிக்க வேதனையுடன் பிறந்தது. நாடு இரு கூறுக்கப்பட்டது. அந்தக் கோரத்தின் பளுவை, கஷ்டத்தை நாம் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறோம். அதோடு நிற்கவில்லை. மேலும் இரண்டு மூன்று போர்கள் மூண்டு, பாகிஸ்தானால் தாக்கப்பட்டோம். நம்முடன் நட்பாக இருந்த சீனாவாலும் தாக்கப்பட்டோம். அந்தப் போர்கள் ஒரு வகையில் தேசத்திற்கு ஒரு முக்கிய நன்மையைக் கொடுத்தன. இன்னல் வந்துற்ற காலத்தில் இந்த நாட்டு மக்கள் எப்படி இருப்பார்கள் என்பதை உலகுக்குக் காட்டின. நமக்குள் எத்தனை மாச்சரியங்கள், சச்சரவுகள் இருப்பினும் போர்க் காலத்தில், ஒன்றுசேர்ந்து ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒன்றாகத் திரண்டு, எதிரியை முறியடிப்போம் என்பதை நிரூபித்துக் காட்டினோம்.

சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளாகியும் நம்முடைய லட்சியத்தை நாம் இன்னும் எய்தினோம் இல்லை. அதை எய்துவதற்கு நாம் இன்னும் வெகுதூரம் போக வேண்டி இருக்கிறது. எழுத்தறிவின்மை பூராவும் போக்கப்படவில்லை. நோயுற்றவர்களுக்கான மருத்துவத்தை அனைவருக்கும் கொடுத்தபாடில்லை. நம்முடைய இறுதி இலட்சியமாகிய சோசலிசத்தை ஜனநாயக ரீதியில் அடைவதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகுமோ, வருஷங்கள் ஆகுமோ தெரியவில்லை. கவி பாடுவதற்கு விழைகிறேன். ஆனால் நான் ஒரு கவிஞன் இல்லை. முதலமைச்சருடைய பேச்சில் அழகான கவிதையை முதலில் இங்கு கேட்டோம். வெறும் கவிதையோடு அவர் நிற்கவில்லை. நல்ல சாரத்தையும் பிழிந்து கொடுத்தார். அதன் மூலம் தமிழ் நாட்டில் தியாகங்கள் பல செய்து தவித்துக் கொண்டிருக்கும் பல தியாகிகளுக்கு மகிழ்ச்சியை ஊட்டினார்.

அடுத்தபடியாக, இன்னும் ஏராளமான பேர்கள்—அன்று சிறை சென்றவர்கள், தடியடிபட்டவர்கள், மண்டை உடைந்தவர்கள்—உயிரோடு இருக்கிறார்கள். அநேகம் பேர்கள் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்கள். அனைவருக்கும் வேண்டிய மரியாதையைச் செலுத்தி அஞ்சலி செய்தல் வேண்டும்.

பொதுவாக, நாட்டின் ஒற்றுமை, நாட்டின் ஒருமைப்பாடு இவைகளைக் காப்பது நம்முடைய முக்கிய கடமையாகும். இதைக் காப்போம் என்ற விரதம் பூண்டு, வாழ்க பாரதம், வாழ்க இந்தியா என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ம. பொ. சிவஞானம்: மேதகு ஆளுநர் அவர்களே! சட்டமன்ற மேலவை, பேரவைத் தலைவர்களே! மாண்புமிகு முதல்வர் அவர்களே! அனைத்துக் கட்சிகளின் தலைவர்களே! அமைச்சர் பெருமக்களே! உறுப்பினர்களே!

சரித்திரச் சிறப்புமிக்க இந்தக் கூட்டத்தில் பேசுகின்ற வாய்ப்பை என் வாழ்க்கையில் பெற்றதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். விடுதலைக்காக சிறைப்பட்ட காலத்திலே—இருட்சிறையில் அடைபட்டு கம்பிகளை எண்ணிக் கொண்டிருந்த நாட்களிலே--''நம் வாழ்நாளில் சுதந்திரத்தை நாம் எங்கே பார்க்கப் போகிறோம்?''—என்று ஏங்கி இருந்த என் ஏழை ஆன்மா, சுதந்திரத்தைப் பார்த்துவிட்டது மட்டுமல்ல; சுதந்திர இந்தியாவிலே கால் நூற்றாண்டுகள் வாழ்ந்து விட்டது என்பதை நினைக்கின்றபொழுது, என் மகிழ்ச்சியை எடுத்துரைக்க எனக்கு வார்த்தையே கிடைக்கவில்லை. உணர்ச்சியின் வடிவமாக இந்த அவையிலே நான் நிற்கின்றேன்.

இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்ட ஆரம்ப நாளிலே—அந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, ''வானம் பொழியுது, பூமி விளையுது; நாடாளும் மன்னவன் காணிக்கு நாடோடியாக வந்தவன் கிஸ்தி கேட்பதா?'' என்று குரல் கொடுத்தான், தென்பாண்டிச் சீமையிலே பாஞ்சாலப் பதியாண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன். அவன்தான் தொடங்கி வைத்தான் விடுதலைப் போரை. அவன் வாழ்ந்த மண்ணிலேயே பிறந்து, விடுதலை வாழ்வின் கால் நூற்றாண்டைக் கொண்டாடுகிற பெருமையை நினைக்கின்றபொழுது என் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிகிறது.

''ஏகாதிபத்தியம் இறக்குமதி செய்த ஆடைகளை எடுத்தெறிய வேண்டும்; அன்னிய ஆடைகளைத் தீயிலிட்டு எரிக்க வேண்டும்''—என்று நம் தேசத் தலைவர்கள் ஆணையிட்ட காலத்திலே, ''ஆடைகளைத் தீயிலிட்டு எரித்தால், திரும்பவும் அடுத்த கப்பலில் வேறு ஆடைகள் வந்துவிடும்''—என்று எண்ணி, ஏகாதிபத்தியக் கப்பலுக்கே வேட்டு வைக்கவேண்டுமென்று விரும்பி, ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் ஓட்டினார் தூத்துக்குடி துறைமுகனார், வ. உ. சிதம்பரம் பிள்ளை. அவர் பிறந்த மண்ணிலே நின்று, விடுதலை வாழ்வின் கால் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம் என்று நினைக்கின்றபொழுது என் இதயம் ஆனந்தத்தால் விம்முகிறது.

இந்தியர்களாகிய நாம் இனத்தால் பலர்; மொழியால் பலர்; ''செப்பு மொழி பதினெட்டுடையாள்—எனிற் சிந்தனை ஒன்றுடையாள்'' என்று பாரதியார் பாடியது போன்று—இனத்தால் பலராயினும், மாநிலத்தால் பலராயினும், மொழியால் பலராயினும்—ஏகாதிபத்திய எதிர்ப்பிலே நாம் ஒரே இனத்தார் போல ஒன்றுபட்டோம். ''நம்முடைய பொது எதிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்; நம் பொது விருப்பம் சுதந்திரம்'' என்ற உணர்வு கொண்டோம். ஓராண்டு ஈராண்டு அல்ல; கட்டபொம்மன் காலம் தொடங்கி, காந்தி அடிகள் காலம் வரை! ஒன்றரை நூற்றாண்டுகள் ஒன்றுபட்டு நாட்டுக்கு விடுதலை தேடினோம். அப்படித் தேடிய விடுதலை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உறுதியை மேற்கொள்வதிலே உங்களோடு நானும்—என்னுடைய தமிழரசுக் கழகத்தின் சார்பிலே—சேர்ந்து கொள்கிறேன்.

இந்திய விடுதலைப் போரிலே தமிழகத்திற்குப் பல தனிப் பெருமைகள் உண்டு. விடுதலைப் போரைத் தொடங்கி வைத்த பெருமை மட்டுமல்ல; ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் விட்ட பெருமை மட்டுமல்ல; முதன்முதலாக ஒரு பெண்மணியை சிறைபிடித்துத் தீர வேண்டிய கட்டாயம் ஏகாதிபத்தியத்திற்கு இந்தத் தமிழ் மண்ணில்தான் ஏற்பட்டது. அந்தப் பெண்மணி டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையாராவார். அவரை மூன்று மாதக் காலம் காவலில் வைத்தது ஏகாதிபத்தியம்.

விடுதலை வீரர்களிலே ஒருவராக நின்று ஏகாதிபத்தியத்தின் இருட்சிறையிலே அடைபட்டு, நம் கன்னித் தமிழுக்கு—கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியின் தாய்மொழிக்கு வாழ்வு தந்தார் பாரதியார். அவர் இந்திய விடுதலைப் போரிலே தோன்றிய ஒற்றைத் தேசியக் கவிஞர்—போர்க்களப் புலவர். அந்தப் புலவர் பிறந்த மண்ணிலே நின்று விடுதலை வாழ்வின் கால் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் பெருமை கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவின் சுதந்திரத்தில்தான் தமிழினத்தின் உரிமை அடங்கியிருக்கிறது என்று நம்பினோம். இந்தியா உரிமை பெற்றால்தான் தமிழினம் உரிமை பெற முடியும் என்றும் நம்பினோம். இந்த நம்பிக்கையோடுதான் பல கோடி இந்திய மக்களோடு தமிழ் மக்களாகிய நாமும் சேர்ந்து உரிமைக்காகப் போராடினோம். 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம்

நாள் நாடு விடுதலை பெற்றது. அது ஒரு பூதாகரமான பொது விடுதலைதான். விடுதலை பெறுவதற்கு முன்பே, விடுதலைக்குப் பின் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் தலைவர்கள் சிந்தித்தனர். பாரத மண் விடுதலை பெற்றால் மட்டும் போதாது; இந்திய சமுதாயத்திற்குப் பொது விடுதலை கிடைத்தால் மட்டும் போதாது; பறையருக்கும் இங்கு தீயர்-புலையருக்கும் விடுதலை—பரவரோடு குறவருக்கும், மறவருக்கும் விடுதலை—என்று பாடினார் பாரதியார். அடையக்கூடிய விடுதலை எப்படியிருக்க வேண்டும் என்றால் எந்தெந்த ஜாதிகள் அடிமைப்பட்டிருக்கின்றனவோ, எந்தெந்த 'மொழி வழியினங்கள் அடிமைப்பட்டிருக்கின்றனவோ, எந்தெந்த மொழிவழிப் பகுதிகள் அடிமைப்பட்டிருக்கின்றனவோ, அவற்றின் மீதெல்லாம் சுதந்திர ஒளி பரவ வேண்டும் என்று சொன்ன முதல் கவிஞன் பாரதி தான். அந்த மகாகவி என்னுடைய தமிழ்நாட்டில்தான் பிறந்தான் என்று நான் நினைக்கும்பொழுது மகிழ்ச்சியடைகிறேன். நாம் பெற்ற விடுதலை பூதாகரமானதுதான். ஆனாலும் அந்த ஒளி பரவவேண்டிய பகுதிகள் இன்னும் உண்டு; ஆம். அந்த ஒளி பரவாமல் இருக்கும் இருள் சூழ்ந்த பல பகுதிகள் இன்னும் உண்டு. அங்கெல்லாமும் சுதந்திர ஒளி பரவ வேண்டும். காலங் கடந்துவிட்டபோதிலும், அடுத்து வரும் பொன்விழாவிற்குள்ளாவது அனைத்து இனங்களின் மீதும் சுதந்திரப் பேரொளி பரவப் பாடுபட நம்முடைய பிள்ளைகளை, பேரப் பிள்ளைகளை விட்டுப் போகப் போகிறோம்; ஏன் நானே இருப்பேன் என்றும் நம்புகிறேன்; நாமெல்லோருமே இருப்போம் என்றும் நம்புகிறேன்.

எல்லாவற்றையும் விட, ஒற்றை மனிதனாக நின்று உலகம் காணாத புதுமுறையில் போராடி விடுதலை பெறுவதற்குத் தலைமை தாங்கிய வீரத் தளபதியாவார் காந்தியடிகள். நம் நாடு விடுதலை பெற்ற பிறகு, அதிகாரத்தை ஏற்காமல் ஆண்டியாக நின்ற ஒரே தலைவரைப் பெற்றெடுத்தோம். அந்த அண்ணலுக்கு என்னுடைய தலைதாழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திர இந்தியாவிலே அவர் பெற்ற ஒரே 'நன்மை' கொலையானதுதான். இது உலகம் காணாத கொடுமை. அவர் எந்தப் பதவியையும் கேட்கவில்லை, எந்தச் செல்வாக்கையும் கேட்கவில்லை, 30 ஆண்டுக் காலம் ஒப்பற்ற விதத்தில் தலைமை வகித்தார். ஆண்டி ஒருவரை அரசியல் தலைவராகப் பெற்ற பெருமை இந்த நாட்டிற்குத்தான் உண்டு. அந்தத் தலைவருக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய விடுதலைப் போரிலே ஈடுபட்டு உயிர்நீத்த அத்தனை தியாகிகளுக்கும் என்னுடைய இயக்கத்தின் சார்பிலே அஞ்சலியைச் செலுத்துகின்றேன். நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களுக்கு, தியாகிகளுக்கு—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும், எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும் — அவர்களுக்கெல்லாம் தலைவணங்கி அஞ்சலியைச் செலுத்துகின்றேன். அவர்களிலே ஒருவனாக இருக்கும் பாக்கியத்தை எனக்குக் கொடுத்த இறைவனுக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேதகு தமிழக ஆளுநர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, இந்திய விடுதலையினுடைய 25வது ஆண்டு வெள்ளி விழாவை 4 கோடியே 10 லட்சம் மக்களையும் வாழவைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற நாம் அத்தனை பேரும் இந்த மணிமண்டபத்தில் கூடிக் கொண்டாடிக் கொண்டிருக்கும்பொழுது பூரிப்பும் பெருமையும் நமக்குத் தோன்றுகின்றன. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்த வீர நன்னாளின் வரலாற்றை மிகச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். இந்த நாடு விடுதலைபெற்ற 25 ஆண்டுக் காலத்தில் நாம் பெற்றிருக்கும் நன்மைகளையெல்லாம் சொல்லி இதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துகின்ற முறையில் நாம் இந்த மணிமண்டபத்தில் கூடியிருக்கிறோம். சுதந்திர மணம் கமழும் மண்டபத்தில் கூடி இருக்கிறோம். உள்ளபடியே இன்றைக்கு இந்த மண்டபம் மணங்கமழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படி மணங்கமழத்தக்க அளவிற்கு மலர்களெல்லாம் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. மிக்க மகிழ்ச்சியோடு கொண்டாடத்தக்க அளவிற்கு இப்படிப்பட்ட சிறப்பான முறையிலே இந்த விழா அமைந்திருக்கிறது.

இந்த நாடு விடுதலை பெற்றிருக்கிற பாங்கினைப் பலரும் சொன்னார்கள். விடுதலை வேட்கையை ஊட்டி, மக்களைத் தயார்படுத்தி, அவர்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்தும் முயற்சியிலே வீரர்களெல்லாம், தானைத் தலைவர்களெல்லாம் எப்படி ஈடுபட்டார்கள் என்பதை எனக்கு முன்பு பேசியவர்கள் தெளிவுபடக் கூறினார்கள். ''வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த

காந்தி மகாத்மா'' என்று பாரதியார் அழுத்தந்திருத்தமாகக் கூறினர். அந்த முறையிலே அண்ணல் காந்தியடிகள் சிறந்த வழிகாட்டிய பாங்கினைக் காண்கிறோம்.

விடுதலை வேட்கை உணர்ச்சியைக் கொண்டிருந்தவர்கள் பலப் பலர். வன்முறை மூலம், துப்பாக்கி—பீரங்கிகளின் மூலம், வெள்ளையரைத் தகர்க்க வேண்டுமென்று ஒரு சாரார் கருதினர்கள். வெள்ளையரை ஒட்டி அண்டி நின்று, எடுத்துச் சொல்லி அவர்களின் மனத்தைக் கரைய வைத்து அதன் மூலம் விடுதலை பெற வேண்டுமென்று எண்ணிய சாராரும் உண்டு. வெள்ளையரோடு ஒட்டி நின்றவர்களும் உண்டு. வெள்ளையரோடு வெட்டி நின்றவர்களும் உண்டு. ஆனல் இரண்டு முறையும் சரியல்ல என்று சொல்லி இடையிலே ஒரு புதிய வழியைக் கண்டு அந்த வழியிலே இந்த நாட்டை இயக்குவித்து விடுதலை வாங்கித் தந்த பெருமை அண்ணல் காந்தியடிகளுக்கு உண்டு என்பதை வரலாறு மிகச் சிறப்பாகக் காட்டுகிறது. போர் என்பது பிறரை வதைத்து பிறரைக் கொன்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது; ஆனல் பிறரை வருத்தாமல் தன்னைத் தானே வருத்திக் கொண்டு பிறரின் உள்ளத்தைத் திருத்தி அதன்மூலம் தன்னுடைய எண்ணத்தை ஈடேற்ற முடியும் என்று காண்பித்து வெற்றி கண்ட காந்தியடிகளுக்கு இந்த நாட்டிலுள்ள நாம் எல்லோரும் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தம் உடம்பையும், தம் உயிரையும் ஈந்து இந்த விலை மதிக்க ஒண்ணுத விடுதலையை வாங்கித் தந்தவர்களின் வீரப் பட்டியல்களையெல்லாம் இங்கே பேசியவர்கள் சிறப்பாகக் கூறினர்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த வாய்ப்பிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு பெரும் தலைவரும், இந்த மாநிலத்தின் முன்னுள் முதலமைச்சராகவும் இருந்த பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறிய கருத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். விடுதலை நாளிலே அவர்கள் குறிப்பிட்ட கருத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமுடையது என்று நான் கருதுகிறேன். '' சுதந்திரப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்தோருக்கும், உயிர்த் தியாகம் செய்யாவிட்டாலும் பல தியாகத் தழும்புகளை ஏற்று உயிர் வாழ்ந்துகொண்டு, வதைப்பட்ட வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற தியாகிகளுக்கும் நமது மனம் நிறைந்த மரியாதையை,

பேரம் பேசாத மரியாதையை, பயன் கருதாத மரியாதை யைத் தெரிவிக்கிறேன். தென்னை மரத்தின் அடியில் சாதாரண மாகத் தண்ணீரை ஊற்றினாலும் அதன் உச்சி, சுவைமிக்க இளநீரைத் தருவது போல, அந்தத் தியாகிகள் எதையும் எதிர்பாராமல் பணிபுரிந்து நம்மையெல்லாம் தலைநிமிர்ந்து நடக்கச் செய்தார்கள். அத்தகைய தியாகிகளுக்கும் மரி யாதை செலுத்துவதில் திராவிட முன்னேற்றக் கழகம் என் றும் தயக்கம் காட்டியதில்லை, தயக்கம் காட்டப்போவது மில்லை. நாட்டிலே ஒரு ஆட்சி ஒரு கட்சியிடமிருந்து இன்னொரு கட்சியிடம் செல்லலாம், தலைமையிடத்தில் மாறுதல் வரலாம். சட்டங்கள் திருத்தப்படலாம், சில எடுக்கப்பட லாம். ஆனால், சுதந்திரம் என்றென்றும் நிரந்தரமானது. சுதந்திரம் என்பது பேச்சினால் மட்டும் இருந்தால் போதாது, செயலிலும் இருக்க வேண்டும். ஒரு நாள் மட்டும் அல்ல, எல்லா நாட்களிலும் போற்றப்படுவது, விரும்பி வரவேற்கப் படுவது'' என்ற கருத்தைக் கூறிவிட்டு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் குறித்துக் குறிப்பிடுகிறபோது, '' இந்த முதல் சுதந்திர நாள் நமக்கும் நம்மை ஆண்ட வேற்று நாட்டவர்களுக்கும் இடையே கணக்குத் தீர்க்கும் நாள், இனி வரும் சுதந்திர நாட்களெல்லாம்தான் கணக்குப் பார்க்கும் நாள். பெற்ற சுதந்திரத்தால்', பெற்ற பயன் என்ன? முழுப் பயன் பெற ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதைப்பற்றிக் கணக்குப் பார்க்கும் நாள்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

1947 ஆகஸ்ட் 15 கணக்குத் தீர்த்த நாள்; அதற்குப் பிறகு வரும் சுதந்திர நாட்களெல்லாம் கணக்குப் பார்க்கும் நாட்களாக அமைகின்றன. 25 ஆண்டுகள் பெருமைப்படத் தக்க அளவில் பலரும் கூறியதைப் போல உலகில் பெரிய ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் ஒரு பெரும் நாடு நமது நாடு. 56 கோடி மக்களைக் கொண்ட ஜனநாயகத்தைக் காப் பாற்றும் நாடு. இந்தியாவிலே எவ்வளவோ மொழி வேறு பாடுகள், இன வேறுபாடுகள், வகுப்பு வேறுபாடுகள், உணவு வேறுபாடுகள், உடை வேறுபாடுகள், எண்ணங்களில் வேறுபாடுகள், பழக்க வழக்கங்களில் வேறுபாடுகள் இருந் தாலும் அன்னியர்கள் படையெடுத்த காலத்தில் அத்தனை பேரும் ஒன்று திரண்டு நிற்பார்கள் என்பதை இந்தியா- சீனப் போராட்டத்தின் போதும் சரி, பாகிஸ்தான் போராட் டத்தின் போதும் சரி உலகுக்குக் காட்டி இந்த நாடு என் றென்றும் நிலைத்து நிற்கும் என்பதை நிலைநாட்டியிருக்கிறது; பெருமைப்படத்தக்க அளவிற்கு வளர்ந்தோங்கி வந்திருக் கிறது.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று" என்று தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார் மிக அழகுபட எடுத்துச் சொன்னார்கள். அந்த ஆனந்த சுதந்திரத்தைச் சென்ற 25 ஆண்டுக் காலமாக அனுபவிக்கிறோம். "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த வாழ்வு அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற கனவைக் காணவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். பாரதியார் கண்ட கனவு நனவாகி 25 ஆண்டுகள் ஆகின்றன. ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம். ஆனந்த வாழ்வு கண்டோம் என்று பாட்டுப் பாடி நிலைநிறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல்—ஜனநாயக முறைகளைப் பேணி வளர்க்க வேண்டும் என்று கூறினார்கள்—ஜனநாயக முறைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் ஜனநாயகப் பண்புகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்கான காரண காரியங்களை விளக்கிக் கூறினார்கள். நாம் பழம்பெரும் பெருமைகளை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம். எங்கிருந்து வந்தோம் என்று பார்த்து மகிழ்ச்சியடைந்தாலும், எங்கு போகப் போகிறோம் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். 56 கோடி மக்களுக்கு எப்படிச் சோறு போடுவது என்பதில் கவனம் செலுத்துவதற்கும் மேலாக 56 கோடி மூளைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் நாட்டம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். 112 கோடி கைகளையும், 112 கோடி கால்களையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதிலே கவனம் செலுத்தி, வாட்டமற்ற, வருத்தமற்ற, கவலையற்ற, தீங்கற்ற ஒரு நல் வாழ்வு அமைக்கப்படுவதற்கு எந்தெந்த வகையிலே பாடுபட வேண்டுமோ அந்தந்த வகையிலே பாடுபட வேண்டும். எனவே, சுதந்திரம் என்பது தானே வாழ்வை வழங்கி விடாது என்பதையும், வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதையும் பேரறிஞர்கள் பலரும் கூறியிருக்கிறார்கள். அந்த வகையிலே நாம் திட்டமிட்டு—அரிமா நோக்கு என்று சொல்வார்கள். சிங்கமானது நடந்து வரும்பொழுது தான் நடந்து வந்த இடத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு, செல்லும் இடத்தை நிமிர்ந்து பார்க்கும் என்று சொல்வார்கள்—அப்படி 25 ஆண்டுக் காலம் வந்த வழியைத் திரும்பிப் பார்த்து இனி செல்ல வேண்டிய வழியை நிமிர்ந்து பார்த்து முன்னேற, பயன்பெறத்தக்க அளவிற்கு இந்த வெள்ளி விழா பயன்

படும் என்று கருதுகிறேன். இந்த நாள் நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய நன்னாளாகும். அந்த வகையிலே நாமெல்லாம் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம்.

கலையே வளர்! தொழில் மேவிடு!
கவிதைபுனை தமிழா!
கடலே நிகர் படைசேர் கடு
விடநேர் கருவிகள் சேர்!
நிலமே உழு! நவதானிய
நிறையூதியம் அடைவாய்;
நிதிநூல்வினை! உயிர் நூல் உரை
நிசநூல் மிக வரைவாய்!
அலைமா கடல் நிலம் வானிலுன்
அணிமாளிகை ரதமே
அவை ஏறிடும் விதமேயுன
ததிகாரம் நிறுவுவாய்!
கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!
தலையாகிய அறமேபுரி
சரிநீதி யுதவுவாய்;
சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்!
இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய்!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கிணங்க அந்த முரசறைந்து எதிர்காலத்திலே கவலையற்ற, வாட்ட மற்ற, வருத்தமற்ற வாழ்வை அமைக்க 4 கோடியே 10 இலட்சம் மக்களுடைய வாழ்வை அமைக்க பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் நாம் சீரிய முறையில் பணியை நிறைவேற்ற முற்படுவோமாக! ஆகவே, இந்த வழி ஆக்கம்

தரும் முறையிலும், ஊக்கம் தரும் முறையிலும் பயன்படுவதாக அமையும் என்று கூறி, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) : மேதகு ஆளுநர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, உறுப்பினர்களே, இன்று சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்காக நாமெல்லாம் கூடியிருக்கின்ற இந்த நேரத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நேர்ந்திருக்கும் என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால், கையிலே வாளெடுத்து வந்தவனின் கழுத்திலே மாலையைப் போட்டு காந்தியார் வழியனுப்பி வைத்தார் என்ற உண்மை புலப்படாமல் இல்லை. உலக வரலாற்றில் 5,000 ஆண்டுகளாகப் பார்த்தாலும் கூட இது மாதிரி சுதந்திரம் வாங்கிய ஒரு நாட்டைக் காண முடியாது; அடிமைத் தளையிலிருந்து நீக்ரோக்களுக்காக விடுதலை வாங்கக் கருதியபோது வட அமெரிக்க நாட்டிலேயிருந்த அமெரிக்கர்களும், தென் அமெரிக்கர்களும் போர்க்களத்திலே சந்தித்துத்தான் அவர்கள் விடுதலை பெற்றார்கள் என்ற வரலாறு நமக்குத் தெரியும். ரொட்டி கேட்டவர்களைச் சுட்டுத் தள்ளியதன் காரணமாக 14-வது லூயி மன்னனைக் கொலைக் களத்திற்குக் கொண்டு சென்று கில்லட்டின் என்ற தூக்குமர வாளாலே கொன்றார்கள் என்ற வரலாறும் நமக்குத் தெரியும். ஜார் மன்னனைக் கீழே போட்டு சமதர்மத்தை நிறுவிய ரஷ்யாவைப்பற்றி நாம் படித்திருக்கிறோம்.

ஆனால், இதுவரையிலும் இல்லாத அளவிற்குப் பார்த்தால் யாரும் பயப்பட முடியாத அளவிற்கு, மிக ஒல்லியானவர், ஆனால் எஃகு போன்ற உள்ளம் உடையவர், வெள்ளைக்காரனே தொட அஞ்சியவர், யார் நந்தவனத்தை வைத்தானோ, அந்த நந்தவனத்தில் உள்ள நச்சரவமே அந்த நந்தவனத்தை வைத்தவனைத் தீண்டிவிடுவதைப் போல, யார் இந்த நாட்டிற்கு விடுதலை வேண்டுமென்று கருதி உழைத்தானோ, அந்த மாபெரும் தலைவனை, கவுரவமான பெருமகனை இந்த நாட்டிலேயே பிறந்த விநாயக் நாதுராம் கோட்சே என்ற பாதகன் சுட்டான் என்ற சோகமிக்க வரலாற்றைப் பார்க்கும் பொழுது, காந்தியாரின் கல்லறை காலத்தாலே மறையக் கூடும், அவரால் எழுப்பப்பட்ட சின்னங்களெல்லாம் கூட மறையக் கூடும். ஆனால் நல்ல உள்ளத்தைப் பெற்றிருக்கும் மனிதர்கள், நமக்குப் பின்னால் வரும் எண்ணற்ற சந்ததிகள் மறக்க மாட்டார்கள். தோழர் ம.பொ.சி. அவர்கள் கூறும் பொழுது பேரன்மார்களும், பேரனுக்குப் பேரன்மார்களும் இதைக் கொண்டாடும்பொழுது நாம் இருப்போமோ இருக்க

மாட்டோமோ என்று சந்தேகப்பட்டார்கள் ; நாம் நிச்சயமாக இருக்க மாட்டோம். (சிரிப்பு) ஏனென்றால் மனிதனுக்குச் சராசரி வயதே 50 தான் ; அதற்கு மேலும் எங்கே இருக்கப் போகிறோம் ? ஆகவே பிறகு நாம் இருக்கப் போகிறோம் என்று அனுவசியமாக விட்டுவிடாமல் நமக்குப் பின்னால் இருக்கின்றவர்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டு மென்று நினைத்தால் அது காந்தியாருடைய வாழ்க்கைதான், அதைச் சொல்ல வேண்டும்.

காந்தியார் எவ்வளவு சீர்திருத்தவாதியாக இருந்தார் என்பது மாத்திரமல்ல. ஒரு தடவை கஸ்தூரி பாய் அம்மை யார், '' கதரைக் கட்டிக்கொண்டு சமைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் மெல்லிய ஆடையைக் கட்டிக் கொண்டு சமைக்கிறேனே '' என்று கேட்டபோது காந்தியார் அவர்கள் சொன்னார்கள், '' That is your liberty. நீ அந்த ஆடையைக் கட்டிக்கொண்டு சமைக்கலாம் ; ஆனால் அப்படிச் சமைக்கிற சாப்பாட்டைச் சாப்பிடுவதா இல்லையா என்பதை நான் தீர்மானிக்கிறேன்,'' என்று சொன்னவுடனே, அந்த அம்மையார் பயந்து போய் பழையபடி கதர் கட்டிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். இதை எதற் காகச் சொல்கிறேன் என்றால், மற்றவர்களுக்குச் சொல்வது எளிதாக இருக்கிறது, நடந்து காட்டுவது கடினமாக இருக்கிறது. காந்தியார் நடந்து காட்டினார்.

இங்கே காந்தியார் அவர்கள் கொலை செய்யப்பட்டது போலத்தான் ஆப்பிரகாம் லிங்கன் கொலை செய்யப்பட்டான். நீக்ரோக்களுக்காக அவன் பாடுபட்டான், பில் ஆப் ரைட்ஸ் வேண்டுமென்று சொன்னான்.

I am going to wreck the Constitution not by force of arms but by ideas that liberate என்றெல்லாம் சொன்னான். I am going to wreck the Constitution not by Guillotine, dynamite or detonator but with ideas that liberate. If the Bill of Rights is to be inserted, it is very nasty, the old Constitution. If I get a chance, I will wreck it off. இதோ போஸ்ட்மேனாக இருக்கிற ஆப்பிர காம் லிங்கன், நான் வெள்ளை மாளிகைக்குச் செல்ல முடியு மானால், அந்தக் கொடுமையை, நீக்ரோ மனிதனே அல்ல என்று சொல்லும் கொடுமையை, நீக்ரோ ஒரு வழக்குப் போட்டு நீதிபதியைக் கேட்கிறபோது, நீதிபதி சொல்கிறார், you are not a man at all under the present Constitution. இன்றைக்கு இருக்கிற அந்த அமெரிக்கச் சட்டப்படி

''நீ மனிதன் அல்ல'' என்று சொன்னபோது, Who am I ? நான் யார் என்று கேட்கிறான். நீதிமன்றத்தில் நீதிபதி சொல்கிறார், you are after all household effects பணக்காரன் வீட்டில் இருக்கும் தட்டு முட்டுச் சாமான் நீ, பணக்காரன் வீட்டில் இருக்கும் சோப்பு, பணக்காரன் காலில் போட்டுக்கொள்ளும் சாக்ஸ், பணக்காரக் குழந்தைகள் விளையாடுகிற பந்து நீ, மனிதனாக இல்லாத நீ எப்படி ஒரு அமெரிக்க நாட்டுக்காரன்மீது வழக்குத் தொடுக்கமுடியும் என்று கேட்ட அந்த விவகாரத்தை ஆப்பிரகாம் லிங்கன் படித்துவிட்டுத்தான் சொல்கிறான்.

''If I have got a chance, I will wreck it off. But I cannot imagine how I can go there. But I take a pledge on the banks of Ohio. It is a long distance from here to Washington. Now I must become a pleader, not to plead some cases individually to earn some bread but I am going to plead the entire matter, for the whole America.

Gentlemen, are you going to allow half America dark ? Are you going to allow half America light ? Please call both Americas either to the light or drive them back to the dark,'' என்று சொன்னான். பாதி அமெரிக்காவை இருட்டில் வைத்துக் கொண்டு, பாதி அமெரிக்காவை வெளிச்சத்தில் வைத்துக் கொண்டிருக்காதீர்கள். கூப்பிட்டால் இரண்டையும் வெளிச்சத்திற்குக் கூப்பிடுங்கள், இல்லையென்றால் இருட்டுக்கே இரண்டையும் ஓட்டுங்கள் என்று சொன்னான்.

அவன் ''Ford's theatre-ல்'' இரவு 12 மணிக்கு ''Our American Cousin'' என்ற நாடகம் பார்த்துக் கொண்டு இருந்தபோது வில்லியம் பூத் என்பவனால் சுடப்பட்டான் என்று பார்க்கிறபோது இவர்களுக்கு இதுதான் முடிவா? அந்த முடிவைப் பார்த்து அவர்கள் என்ன செய்து இருப்பார்கள் ?

இந்த நாடே காந்தியார் அவர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறது. இந்த நாடே அவர்களுக்குச் சொந்தம். ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது — எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னது மாதிரி — ஒரு மூன்று குண்டுகள். அந்தக் கொடுமைகள் இனி வராத வண்ணம் மனித சமுதாயத்தில் நாகரீகமும், பண்பாடும் வளர வேண்டும். இப்போது இருப்பது என்ன ஜனநாயகம் ? What sort of democracy we are achieving ? Is it direct or indirect democracy or capitalist democracy? What sort of democracy is it ? என்று இன்னமும் நாம் தெரியாமல் இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். இது நேரடியான ஜனநாயகமா?

மறைமுகமான ஜனநாயகமா? முதலாளித்துவ ஜனநாயகமா ? எந்த ஜனநாயகம் ? கிரேக்கத்திலே இருந்தது நேரடி யான ஜனநாயகம். அமெரிக்காவில் இருந்தது முதலாளித் துவ ஜனநாயகம். அங்கே முதலாளிகள் ஜனநாயகத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இங்கே நாம் சொல்வது ‘ இன்டைரக்ட் டெமாக்ரசி ’ 8,000 பேர் 80,000 லட்சம் ஓட்டுகளை வாங்குகிறபோது, ஒன்று நாம் சொன்னால் உண்டு ; இல்லையென்றால் பத்திரிகை கள் சொன்னால் உண்டு ; பத்திரிகைகள் உண்மை சொன் னால் உண்டு, அல்லது பொய் சொன்னால் உண்டு, என்ற நிலைமைகள் இருப்பதாலே, இவைகளை நாம் கட்டிக் காப் பாற்ற வேண்டும்.

பேசியவர்கள் ஏதோ எனக்கு இரண்டு நிமிடங்கள் அதிக மாகக் கொடுத்து விட்டார்கள் என்று கருதுகிறேன். சட்ட மன்றங்கள் நடைபெறுகிறபோது இப்படியே இருந்தால்கூட மிக நல்லதாக இருக்கும் என்று கூறி, நாம் நம்முடைய நன்றியை அந்த மறைந்த மாபெரும் தலைவனுக்கு, விடுதலை வீரனுக்கு, அந்த ரிபார்மர், லிபரேட்டர், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த அண்ணல் காந்தியார் அவர்களுக்குச் செலுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு கே. ஏ. மதி யழகன்) :</u> மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு முத லமைச்சர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களே,

சுதந்திரம் பெற்ற வெள்ளி விழா நாளான இந்த 25-ம் ஆண்டு இன்னும் 10 நிமிடங்களிலே இந்திய பூபாகத்தின் ஒரு பெரிய காலக் கட்டம் முடிவு அடைகிறது. இந்த மாபெரும் மன்றத்திலே 4 கோடி மக்களுடைய மன நிலைகள், ஆர்வங்களுடைய இதய ஒலியாகவும், அவர்களுடைய நிலைக் கண்ணாடியாகவும் பிரதிபலிக்கிற சட்டமன்ற உறுப் பினர்கள், மேலவையினுடைய உறுப்பினர்கள், இந்த மன்றத்தில் இந்த வெள்ளி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், மேதகு ஆளுநர் அவர்களுடைய கருத்துடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்துடனும், இங்கே பேசிய பல கட்சித் தலைவர்களுடைய

கருத்துடனும் என்னுடைய கருத்துக்களையும் இணைக்கும்படி யான ஒரு வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மிகுந்த பெருமைப் படுகிறேன்.

சுதந்திரம் பெற்ற இந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு, இங்கே சுதந்திர மாவீரர்களுக்கெல்லாம் அஞ்சலி செலுத்தப் பட்டது. அந்த உணர்வோடு என்னுடைய உணர்வையும் நான் இன்றைக்கு இணைக்கிறேன். தேசத்திற்காகப் போரா டியவர்கள், செக்கிழுத்தவர்கள், சிறையிலே மடிந்தவர்கள், தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டவர்கள், சொத்து இழந்தவர் கள், சுகம் இழந்தவர்கள், மனைவி மக்களை இழந்தவர்கள், பிள்ளை குட்டிகளை இழந்து வெளிநாட்டில் அனாதை களாகத் திரிந்தவர்கள் இப்படிப்பட்ட பல்லாயிரக் கணக் கானவர்களின் ரத்தத்தாலும், கண்ணீராலும், பல்லாண்டுக் காலம் உலகத்திலே சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்திட மிருந்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திடமிருந்து, நமது அண்ணல் காந்தியடிகளின் மாபெரும் தலைமையால் இந்தப் பெரிய பூபாகம் விடுதலை பெற்றது. அந்த மாவீரன் காந்தியடிகள் அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரம் பெற்ற 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் இதே சட்டமன்றத்திலே சுதந்திரம் பெற்றதற்காக வும், வீரர்களுக்கும், தியாகிகளுக்கும், அந்தச் சுதந்திரப் போராட்டத்தை நடத்திய தலைநாயகன் காந்தியடிகள் அவர் களுக்கும் இதே மாமன்றம் திரு. சிவசண்முகம் பிள்ளை அவர் கள் பேரவைத் தலைவராக இருந்தபோது, தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறது. சுதந்திரம் பெற் றுத் தந்ததற்குப் பெரிய தீர்மானத்தையும் இந்த மாமன்றம் நிறைவேற்றியது. அந்த காந்தியடிகள் இன்றைக்கு நம் மோடு இல்லை. ஆனால், இந்த 25-வது ஆண்டு விழா கொண்டாடுகிற நேரத்தில் காந்தியடிகளை நமக்களித்த குஜராத் மாநிலத்தில் தோன்றிய ஒரு ஒப்பற்ற சுதந்திரப் போராட்ட வீரர் அவர்கள் இன்று இந்த மாமன்றத்தில் அமர்ந்திருப்பது உண்மையிலேயே நமக்கு மிகுந்த பெருமை யைக் கொடுக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில், தமிழ் நாடு சுதந்திரப் போராட் டத்திற்கு ஆற்றிய பங்கை எடுத்துச் சொல்லியதோடு மட்டு மல்ல, அது தன்னுடைய தலைமையையும், உணர்வுகளையும் வழங்கியது என்று சொன்னார்கள். "Tamil Nadu not only played a dominant role but provided inspiration and leadership" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் தம் தொடக்க உரையில்.

காந்தியடிகள் அவர்கள் முதன் முதலாக இந்த சென்னை மாநகரத்திற்கு வந்த நேரத்தில், இன்றைக்கு மாநகராட்சி மன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கும் மண்டபத்தில் — இன்றைக்கு அந்த மண்டபம் ஓட்டல் விடுதியாக இருக்கிறது — தமிழ் நாடு மக்கள் அவர்களுக்கு அளித்த வரவேற்புக்குப் பதில் சொல்கிற நேரத்தில் ''நான் தென் ஆப்பிரிக்க நாட்டிலே இருந்தேன். அங்கேயிருந்து நான் வந்து இந்திய விடுதலைப் போராட்டத்தை நடத்துகிறேன் என்பதற்காக என்னை இப்படிப் புகழ்கிறீர்கள். ஆனால் இந்திய சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும், இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தரவேண்டுமென்ற உணர்வை எனக்களித்ததே தமிழ் நாட்டில் பிறந்த 17 வயதுச் சிறுமி வள்ளியம்மை என்ற பெயருடையாள். மார்க்ஸ்பர்க் சிறைச்சாலையில் ஒரு வெள்ளைக்கார அக்கிரமக்காரனுடைய பயங்கரமான கொடுமைக்கு ஆளாகி அவள் மரித்தாள். அதே மாதிரியாக நாகப்பன், நாராயணசாமி என்ற இரண்டு தமிழ் நாட்டு வாலிபர்கள், இம்மாதிரியாக ஏழை, எளிய பாட்டாளிகள், வெள்ளைக்காரனுக்கு எதிராகப் போர் தொடுத்ததன் உணர்வு தான், இந்திய மண்ணுக்குத் திரும்ப வேண்டும், இந்திய விடுதலைக்குத் தலைமை தாங்க வேண்டுமென்ற எண்ணத்தையே எனக்கு அளித்தது. என்னையும், என்னுடைய மனைவியையும் இவ்வளவு புகழ்கிறீர்களே, எங்களையே இவ்வளவு புகழ்ந்தீர்களானால், தில்லையாடி வள்ளியம்மையையும், நாகப்பனையும், நாராயணசாமியையும் என்ன வார்த்தைகளாலே நீங்கள் புகழப் போகிறீர்கள்!'' என்று காந்தியார் அவர்கள் கேட்டார்கள். காந்தியார் அவர்களுக்கே இந்த சுதந்திர தீபத்தை, அந்த உணர்வுகளை ஏற்றி வைத்த பெருமையிலே தமிழ்நாடு பங்கு கொண்டது என்ற பெரிய பூரிப்பிலே நாம் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியை அடையலாம்.

இன்றைக்கு 25 ஆண்டுகள் ஓடி ஒளிந்துவிட்டன. இந்த 25 ஆண்டுக் காலம் இவ்வளவு பெரிய தியாகங்கள், இவ்வளவு பெரிய உறுதிப்பாடுகள், ஒரு பெரிய வேகம், இவைகளையெல்லாம் செய்த அந்த மாபெரும் மக்களுக்கு அஞ்சலி செலுத்துகிற நேரத்தில், நேற்று என்பது என்றைக்குமே நினைவுதான். நாளை என்பது கனவுதான். ஆனால் இன்று என்பது தான் உண்மை என்ற நிலையில், இந்த 25 ஆண்டுக் காலமாக எத்தனையோ மாதிரியான போராட்டங்கள், எத்தனையோ மாதிரியான இயக்கங்களிலே பங்கு கொண்ட வீரர்களுக்கு எல்லாம் என்னுடைய நல்வாழ்த்துக்களை இன்று, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ம் நாள் நள்ளிரவு சரியாக 12 மணி அடிக்கப் போகிறது.

" At the stroke of midnight our India will awake with life and freedom. Today we end a period of ill-fortune and India is rediscovering herself. Today the achievements which we celebrate is but only a step, an opening of opportunity to greater triumphs and achievements. Are you brave enough ? Are you wise enough to grasp the opportunities, to accept the challenge of the future ?"

என்று இதே மணி நேரத்தில் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் இரவு 12 மணிக்கு யமுனை நதிக்கரையில் இருக்கும் பாராளுமன்ற மண்டபத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முழங்கினார்கள். அதைத்தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீர சபதமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள்.

இது ஒரு கட்டம் தான். ஏராளமான அறைகூவல்கள், ஏராளமான வாய்ப்புகள், அந்த வாய்ப்புகளுக்கு எல்லாம் நம்மைத் தகுதிப்படுத்திக்கொண்டு, அந்த அறைகூவல்களைச் சமாளிக்கிற நல்ல காரியங்களை நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

" The ambition, the greatest ambition of our generation, has been to wipe out every tear from every eye. As long as there are tears and sufferings, our work will not be over "

என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். ஒவ்வொரு மனிதனுடைய கண்ணிலும் கண்ணீர்த் துளி இருக்கிறவரைக்கும் துன்ப துயரங்கள் இருக்கிறவரைக்கும் நம்முடைய வேலை ஓயாது, ஒழியாது, அந்த வேலை 25 ஆண்டுகள் சுதந்திரம் பெற்றபிறகு இன்னும் ஓயவில்லை. பல நல்ல முன்னேற்றங்கள், நல்ல மாபெரும் முயற்சிகள் எல்லாத் துறைகளிலும் நடந்தாலும், அரசியல் சுதந்திரம் என்பது வெறும் எழுத்துக் கோர்வைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பொருளாதார சுதந்திரம், பெற்ற சுதந்திரம் தாரதம்மியமற்றதாக ஏற்பட்டாக வேண்டும். ஒரு பெரிய சுதந்திர சமுதாயத்திலே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதாபேதங்கள் இருக்கிற நிலைமைகள், இவையெல்லாம் மாறுவதற்கான ஒரு பெரிய போராட்டத்திற்கு, பொருளாதார சுதந்திரப் போராட்டத்திற்கு, சமுதாய சுதந்திரப்

போராட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவாகத்தான் இந்த மாபெரும் விழா இன்றைக்கு இந்திய பூபாகத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

நமக்கு முன் இருந்த தலைமுறை தியாகங்கள், அவர்களுடைய உறுதி, அவர்களுடைய வீரம் செறிந்த போராட்ட குணங்கள், அவர்களுடைய அழுத்தமான தியாக குணங்கள் இவையெல்லாம், எங்கெங்கே அக்கிரமங்கள் இருக்கின்றனவோ, எங்கெங்கே அநியாயங்கள் இருக்கின்றனவோ, எங்கெங்கே சுரண்டல்கள் இருக்கின்றனவோ அவற்றுக்கெல்லாம் எதிரான ஒரு புதிய போராட்டத்திற்கு உருவம் தருகிற இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தினுடைய அடித்தளமாகத்தான் இன்றைக்கு இந்திய பூபாகம் இந்தப் பெரிய விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பெரிய விழாவில் தமிழகத்தில் நல்ல முறையில், நான் மிகுந்த பெருமையோடு சொல்கிறேன், 4½ கோடி மக்களின் இதய ஒலியாகவும், நம்பிக்கையினுடைய நாதமாகவும், என்னுடைய உடன்பிறப்பு போன்ற ஒருவரும், 25 ஆண்டுக் காலமாக என்னுடைய அரசியல் வாழ்விலே பங்கு கொண்டவருமான ஒருவருடைய தலைமையில் இன்றைக்குத் தமிழகம் பெரிய நம்பிக்கை பெற்று அவர் வழி நடத்திச் செல்கிறார் என்பதிலே நான் மிகுந்த பெருமைப் படுகிறேன். அவரது முயற்சிகள், அவரது ஆயத்தங்கள், அவர் மேற்கொண்டு இருக்கிற அந்தக் காரியங்கள், பொருளாதார சுதந்திரத்திற்கும் சமுதாய சுதந்திரத்திற்கும் பலன் அளிக்கிற வகையில் அமைந்துள்ளவையாகும். நாட்டினுடைய விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தங்களையே அர்ப்பணித்த, மறைந்த மாவீரர்களுக்கும், உயிரோடு இருக்கிறவர்களுக்கும் என்னுடைய நல்ல மரியாதையைச் செலுத்தி என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

நள்ளிரவு 12.00 மணிக்கு தேச விடுதலைக்காக அரும் பெரும் தியாகங்கள் புரிந்துள்ள தியாகிகளுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் வண்ணம் பேரவையில் அமர்ந்திருந்த அனைவரையும் 2 நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க 15—8—1972-ம் நாள் காலை 00-01 மணி முதல் 00-03வரை தமிழ்நாடு சட்டப் பேரவை மண்டபத்தில் குழுமி இருந்தோர் அனைவரும் எழுந்து நின்று விடுதலை வீரர்களுக்குத் தம் அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

உடன், நாட்டு வணக்கப் பாடல் இசைக்கப்
பெற்றது.

00-15 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவருடனும், சட்டமன்ற மேலவைத் தலைவருடனும் பேரவை மண்டபத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல, இந்திய விடுதலை வெள்ளி விழா சிறப்புக் கூட்ட நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

65/84